*ISSN No. : XXXXXXXXX* *அவையம் 1 (2017) p.no. 24 - 31*

புதிய அவையம்

SACRED HEART RESEARCH PUBLICATIONS

---

## சவ்வாதுமலையில் பழங்கற்காலத் தடயங்கள்

**முனைவர் க. மோகன்காந்தி,**
**உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை,**
**தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர், வேலூர்-635 601.**

**கட்டுரை பெறப்பட்டது:** *21.12.2016* **ஏற்கப்பட்டது:** *05.05.2017*

---

தமிழக நெடும்பரப்பு எண்ணற்றத் தொல்லியல் தடயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. 'கொடுமணல்', 'கீழடி' அகழாய்வுகள் போல்வன தமிழகத்தின் தொல் பெருமையை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தின் வடபகுதியில் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு உட்பட்ட சவ்வாதுமலைப் பகுதியில் ஏராளமான நடுகற்கள், கல்வெட்டுகள் காணக் கிடைக்கின்றன. அவ்வரிசையில் வரலாற்றுக்கு முந்தைய பழங்கற்காலச் சின்னங்களும் இம்மலையின் தொன்மையைப் பறைசாற்றி நிற்கின்றன. தொப்பிக் கற்கள் (கற்திட்டைகள்), கற்கோடாரிகள், பழங்கற்கால ஆயுதங்கள் தயாரிக்கப்பட்ட பட்டறை (தொழிற்கூடம்) ஆகியவை இங்கு ஆய்வுப் பொருளாக அமைகின்றன.

### சவ்வாதுமலையும் மலைபடுகடாமும் (சங்கஇலக்கியம்)

சங்க இலக்கியத்திலுள்ள பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மலைபடுகடாம். இந்நூல் நன்னன் சேய் நன்னன் என்னும் 'வேளிர்' குலத் தலைவன் நவிரமலை, சேயாறு, செங்கண்மா (மலை, ஆறு, ஊர்) ஆகியவற்றைத் தன் ஆளுகையின் கீழ் ஆட்சி புரிந்துள்ளான் என்பதை விளக்குகிறது. நவிரமலை தற்போதைய சவ்வாதுமலைப் பகுதிதான் என்பதை கல்வெட்டுகளால் அறியமுடிகிறது.

### சவ்வாதுமலையில் பழங்கற்காலத் தடயங்கள்

வரலாற்றுக் காலமான சங்க காலத்தில் சவ்வாதுமலையில் மக்கள் வாழ்ந்திருந்ததை மலைபடுகடாம் உறுதி செய்கிறது. ஆனால், வரலாற்றுக்கு முற்பட்ட

*காலம் தொட்டே இம்மலையில் மனித இனம் வாழ்ந்துள்ளதைப் பழங்கற்காலத் தடயங்கள் உறுதி செய்கின்றன.*

### *1. கற்திட்டைகள் (தொப்பிக்கற்கள்)*

*சவ்வாதுமலையிலுள்ள கீழ்ச்சேப்பிளி, மண்டப்பாறை, மேல்பட்டு, கோம்பை போன்ற ஊர்களில் பெருங்கற்காலத்தைச் சேர்ந்த கற்திட்டைகள் காணப்படுகின்றன. இவை இறந்த முன்னோரின் புதைவிடங்களாகும். இவ்விடங்களை மக்கள் வாளியர் வீடு, வாளியர் கூடாரம், பஞ்சபாண்டவர் குகை, கல்வீடு, குள்ளர்வீடு போன்ற பெயர்களில் வழங்குகின்றனர். சங்க இலக்கியம் இறந்தவர்களுக்குக் கல்பதுக்கைகளும் நெடும் கற்களும் நடுகற்களும் நட்ட செய்திகளைப் பதிவு செய்துள்ளது. எனவே, இறந்த முன்னோரின் உடலைப் புதைத்துப் பெரிதும் சிறிதுமான கற்களை அதன்மேல் இட்டு, கல்லை மூடாமல் (ஒரு வேளை மூடினால் அந்த இடத்தில் இடுதுளை (port hole) வைத்து மேற்புறத்தில் பலகைக் கல்லை வேய்ந்து கட்டியுள்ளனர். இந்த அமைப்பை நோக்கும் போது கிழக்குப் பார்த்த வாயிலை அமைத்த முன்னோர் வழிபாட்டின் கோயில்களாக இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. இதை உறுதிப்படுத்தும் விதத்தில் தொல்லியலாளர் மா.சந்திரமூர்த்தி “போர் வீரர்களுக்கு எடுக்கப்பட்டத் தொடக்க நிலை கற்கோயில்களாக இவை இருக்கலாம்” என்கிறார். மலைபடுகடாமில் ‘துணைபுணர் வாளியர்’ என்ற சொல்லை நோக்கும் போது ‘வாளியர்’ என்பது வீரர்கள் என்ற பொருளில் சொல்லப்பட்டுள்ளது. எனவே, வாளியர் கூடாரங்கள் இறந்த போர் வீரர்களை அடக்கம் செய்த இடங்களாகும். மேலும், கற்திட்டைகளைக் கோயிலாகவும் ஈமச்சடங்கு செய்யப்பட்ட வீரர்களைத் தெய்வங்களாகவும் மதித்துப் பழந்தமிழர் வணங்கியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.*

*ஈமச்சடங்குகள் குறித்து, “பெருங்கற்கால மனிதன் ஈமச்சடங்குகளில் பல்வேறு முறைகளைப் பின்பற்றினான். அவை இன்றும் தமிழகத்தின் பல பகுதிகளில் மரபுவழியாகப் பின்பற்றப்படுகின்றன. கற்கிடை, கற்குவை, கல்பதுக்கை, தொப்பிக்கல், குடைக்கல், நடுகல், ஈமத்தாழி, ஈமப்பேழை என்பன அன்றைய மக்கள் இறந்தவர்களைப் புதைக்கப் பின்பற்றிய நெறிமுறைகளை எடுத்தியம்பும் சான்றுகளாகும்” என்கிறார் அ.கிருஷ்ணன். (எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர் பக் 280-281) எனவே, சவ்வாதுமலையில் உள்ள கற்திட்டைகள் முன்னோர்களை அடக்கம் செய்த இடம் என்றும் முன்னோர் வழிபாட்டின் கற்கோயிலின் எச்சம் என்றும் உணர முடிகிறது.*

### *வாளியர் மேடு (கீழ்ச்சேப்பிளி)*

*போளூருக்கும் செங்கத்திற்கும் இடைப்பட்ட கோயில் மாதிமங்கலத்திலிருந்து கிடாம்பாளையம், கேட்டவரம்பாளையம் தார்ச்சாலை வழியாகப் பட்டறைக்காட்டை அடையலாம். பட்டறைக் காட்டிலிருந்து புதூர் என்னும் சிற்றூர் வரையில் வாகனங்கள் செல்ல முடியும். புதூரிலிருந்து ஏறத்தாழ 7 கி.மீ. தூரத்தில் அடர்ந்த*

வனப்பகுதிகளையும் வழுக்கு நிலங்களையும் கொண்ட வழிப்பாதையைக் கடந்தால் மேல் சேப்பிளியை அடையலாம். மேல் சேப்பிளியிலிருந்து 3 கி.மீ. தொலைவில் கீழ்ச்சேப்பிளி அமைந்துள்ளது. இப்பாதை ஒற்றையடிப் பாதையாகவும் கரடுமுரடாகவும் செங்குத்தான மலைப்பாதையைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. இம்மலையின் உச்சிப் பகுதியில் இருபடிநிலைகளாகக் கற்திட்டைகள் (கற்கூடாரங்கள்) காணப்படுகின்றன. கீழ்ப்பகுதி இரண்டு பெரும் பள்ளத்தாக்குகளுக்கு மத்தியில், ஏறத்தாழ 1/2 கி.மீ. பரப்பளவு கொண்டதாக அமைந்துள்ளது. இதில் 30 கற்திட்டைகள் சிறு, சிறு கருங்கற்களைக் கொண்டு மூன்று பக்கங்களும் அடுக்கி மேற்கூரையில் பெரிய பலகைக் கற்களால் போர்த்தப்பட்டுள்ளன. ஒரு பக்கம்' வழியை அமைத்துள்ளனர். இதற்குச் சற்றுமேல் பகுதியில் 90 கற்திட்டைகள் காணப்படுகின்றன. ஏறத்தாழ ஒரு ச.கி.மீ.பரப்பளவில் பெரிய, பெரிய கருங்கற்களைக் கொண்டும் மேற்கூரை பலகைப் பாறைகளைக் கொண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கற்குகைகளில் வலது அல்லது இடது என ஏதேனும் ஒரு பக்கத்தில் வட்ட வடிவிலான சுமார் 1 1/2 அடி விட்டமுள்ள ஒரு துளையையும் பாறைகளில் சூரிய வழிபாடு குறித்த சில சித்திரங்களையும் (குறியீடு) காணமுடிகிறது. மேல் மற்றும் கீழ் கற்திட்டைகள் முறையே 90, 30 என்ற எண்ணிக்கையில் அமைந்துள்ளன. இவ்விரு பகுதிகளிலும் சிதைந்துள்ள கற்திட்டைகள் ஏறத்தாழ 50 ஆகும். மொத்தமாக 170 கல்வீடுகள் இப்பகுதியில் இன்றளவிலும் இருப்பது தொல்லியல் அடையாளமாகப் போற்றப்பெறுகிறது. 'வாளியர்மேடு' என்று அழைக்கப்பெறும் இச்சொல்லாட்சி மலைபடுகடாமில் குறிக்கப்பட்டுள்ளது இங்கு நோக்கத்தக்கது.

> "எடுத்துநிறுத் தன்ன இட்டருஞ் சிறுநெறி
> தொடுத்த வாளியர் துணைபுணர் கானவர்" (மலைபடு., 16-17)

தமது மனைவியருடன் கூடியிருக்கும் கானவர்கள், வில், அம்பினை உடையவர்களாக அவ்வழியில் செல்வோர்க்கு எவ்வகை இடையூறுமின்றிக் காவல் புரிந்து, அவர்கள் செல்வதற்குத் துணை நிற்பர், என்று மலைபடுகடாம் கூறும் கருத்து வாளியர் கற்கூடாரங்களோடு பொருந்தி நிற்பதை அறிய முடிகிறது. இங்கு வாளியர் என்னும் சொல்லாட்சி வில், அம்பினைக் கொண்ட வீரர்கள் என்ற பொருளில் இடம் பெறுகிறது. வில் அம்பினைக் கொண்ட மறவர்கள் இறந்ததால் அவர்களைப் புதைக்கப் பயன்பட்ட இடத்தையும் வாளியர் மேடு என அழைக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

*வாளியர்மேடு(கள்ளிப்பாறை)*

*சமுனாமரத்தூரிலிருந்து வீரப்பனூர், மண்டப்பாறை, கள்ளிப்பாறை வழியாகப் புதுக்காட்டை அடையலாம். இப்புதுக்காட்டிற்கு அருகில் 'வாளியர் மேடு' அமைந்துள்ளது*



**கள்ளிப்பாறை ஆய்வுக்களத்தில் ஆய்வாளரோடு அருள் முனைவர் அ.மரியசூசை அடிகளார்**

*100 மீ. நீளமும் 40மீ. அகலமும் உடைய சமதளமான பாறை மீது கற்திட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தளத்தின் கீழ்ப்புறத்தில் இரு மருங்கிலும் பள்ளத்தாக்குகளும், ஆறுகளும் இருந்த காரணத்தினால் நன்றாகக் காற்று வீசுகிறது. எப்பொழுதும் காற்று வீசக்கூடிய இடமாக அவ்விடம் அமைந்துள்ளது. அந்தத் தளத்தின் இடது, வலது புறமாக மலைகள் சற்று உயர்ந்து இருக்கின்றன. கற்திட்டைகள் சுமார் 30 இருக்கின்றன. அதில் சிதைந்த நிலையில் ஒரு சில கல் வீடுகளும் கட்டுமானம் தளராமல் பல கல் வீடுகளும் உள்ளன. ஒரு வீட்டிற்குள் ஆடுகள் தங்கியிருந்ததற்கான அடையாளமிருந்தது. அனைத்துக் கற்திட்டைகளும் கிழக்கு நோக்கி இருக்கின்றன. ஒழுங்கான வட்ட வடிவ வாயிலைக் கொண்ட கற்திட்டைகள் 3 உள்ளன. கற்திட்டைகளின் மேலுள்ள மிகப் பெரிய கல் சுமார் 15 அடி நீளமும் 10 அடி அகலமும் 3/4 முதல் 1 அடி வரையிலான பருமன் கொண்ட பாறை மேற்கூரையாக உள்ளது. மூன்று புறமும் செங்குத்தாக நிறுத்தி வைக்கப்பட்ட பாறைகள் மீது இந்தக் கற்பலகைப் பொருத்தப்பட்டிருக்கிறது. இப்பாறைகள் உடைத்து எடுக்கப்பட்ட அடையாளங்கள் அருகிலேயே காணப்பட்டன. உளி வைத்தோ (அ) வெடி மருந்து வைத்தோ பாறைகள் உடைக்கப்படவில்லை. மாறாக பிறரிடம் கேட்டதிலிருந்து இரவு முழுவதும் உடைக்கப்பட வேண்டிய பாறைகள் மீது தீயிட்டு கொளுத்தும் போது பாறைகள் சூடேறிக் கற்பாளங்களாக வெடித்திருக்க வேண்டும் என்று அறிய முடிகிறது. நுழைவு வாயில்கள் வட்ட வடிவில் மிகவும் பொருத்தமாகக்*

குடையப்பட்டிருக்கின்றன. அருகில் ஆடு, மாடு மேய்க்கக்கூடிய மக்கள், அப்பகுதியை 'வாளியர் கூடாரம்'என்றும் 'வாளியர் பாறை' என்றும் அழைக்கின்றனர்.

இந்த இடம் முன்னோர்களின் புதைவிடமாகவே இருந்திருக்க வேண்டும். கற்கூடாரங்கள் மேல் பொருத்தி வைக்கப்பட்டுள்ள கற்பாறைகளை ஏதாவது இயற்பியல் தத்துவத்தைக் கொண்டே மேலே ஏற்றி இருக்க வேண்டும். ஒவ்வொரு பாறையையும் 50 பேர் சேர்ந்தாலும்கூடத் தூக்க முடியாத அளவிற்கும் பலம் வாய்ந்ததாக உள்ளன. வாளியர் மேட்டிற்குப் பழைய பாதைகள் இருப்பதாகத் தெரியவில்லை. அண்மைக் காலத்தில் ஒரு புதிய மண்சாலை உருவாக்கப்பட்டுள்ளது. இச்சிறிய வீடுகளின் அமைப்பைக் கொண்ட இக்கற்திட்டைகளில் சித்திரக் குள்ளர்கள், தேவர்களின் வழி வந்தவர்கள், பாண்டவர்கள் வாழ்ந்தனர் என்று மக்கள் நம்புகின்றனர். ஆனால், இவை இறந்தோரின் நினைவிடம் என்பதே உண்மை.

**சவ்வாது மலைக் கோம்பையில் கற்திட்டைகள்**

வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட சவ்வாது மலையிலுள்ள புதூர்நாடு பகுதியில் அமைந்துள்ள 14 கிராமங்களில் 'கோம்பை' என்ற சிற்றூரும் ஒன்று. இம்மலை சிற்றூரின் மேற்குத்திசையில் உள்ள மலைச்சிகரத்தில் முருகன் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயிலின் பின்புறத்தில் உள்ள சின்னசாந்திக்காரர் துக்கன் மேட்டுநிலப்பகுதியை அடுத்த அகன்ற பாறை வெளியில் சிறிதும், பெரிதுமான கற்திட்டைகள் 15 க்கும் மேல் காணப்படுகின்றன. இதில் பல கற்திட்டைகள் சிதைந்துள்ளன. ஒருசில மட்டுமே கட்டுமானம் தளராமல் உள்ளன. இக்கற்திட்டைகளை இக்கட்டுரையாளர் மற்றும் சென்னை மாநிலக் கல்லூரியின் ஆய்வு மாணவர்களான ரே.கோவிந்தராஜ், கோ.வேந்தன் ஆகியோர் கண்டறிந்துள்ளனர். மலைவாழ் மக்கள் இக்கற்திட்டைகளைப் பாண்டவர் குகை என்றழைக்கின்றனர். பஞ்சபாண்டவர் வனவாசத்தின் போது இங்கு தங்கியதாக நம்பிக்கை வைத்துள்ளனர். இக்கற்திட்டைகள் வரலாற்றுக்கும் முற்பட்ட பெரும் கற்காலத்தைச் சேர்ந்தவைகளாகும். கி.மு. 3 ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்தனர் என்பது இதன்மூலம் தெரியவருகிறது. சங்க நூல்களில் பரவலாகக் கற்பதுக்கைகள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. கற்திட்டை, கற்பதுக்கை, கற்குவைப் போல்வன பெரும் கற்காலச் சின்னங்களாகும். புதூர்நாட்டிற்குட்பட்ட மலைச் சிற்றூர்களில் எழுத்துடைய நடுகற்கள், கல்வெட்டுகள், பழங்கற்கால மனிதர்கள் பயன்படுத்திய கற்கோடாரிகள் போல்வன கண்டறியப்பட்டுள்ளன. அவ்வரிசையில் இந்தக் கற்திட்டைகள் வரலாற்றுச் சிறப்புடையவை ஆகும். ஏற்கனவே கீழ்ச்சேப்பிளி, மண்டபப்பாறை, மேல்பட்டு போன்ற இடங்களில் கற்திட்டைகள் கண்டறியப்பட்டுள்ளன. அவ்வரிசையில் கோம்பையில் கிடைத்துள்ள கற்திட்டைகளும் சவ்வாது மலையின் பழமையை உணர்த்துகின்றன.



**சிதைந்த நிலையில் காணப்படும் கோம்பைக் கற்திட்டை**

***2.கற்கோடாரிகள்***

*வேளாண் தொழிலைத் தமிழர் கண்டறிவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வேட்டைத் தொழிலில் ஈடுபட்டிருந்திருப்பர். வேட்டைத் தொழில் மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தில் சிறப்புடன் நடைபெற்றது. வேட்டை விலங்குகளைக் கொல்வதற்கும் கொன்ற விலங்குகளின் தோல்களைக் கிழிப்பதற்கும் மரங்களை வெட்டுவதற்கும் கற்கால மனிதர்கள் கற்கோடாரிகளைப் பயன்படுத்தி இருப்பர். அவ்வகையில் குறிஞ்சி நிலமான சவ்வாது மலையில் எண்ணற்ற கற்கோடாரிகள் கிடைத்திருப்பது பழங்கற்கால வரலாற்றின் எச்சமாகும். 'செம்பியின் கண்டியூர்' என்னும் சிற்றூரில் 2006 இல் புதிய கற்காலத்தைச் சேர்ந்த கைக்கோடாரி கண்டறியப்பட்டுள்ளது. இது சிந்துவெளி எழுத்துப் பொறிப்புடன் கிடைத்திருப்பது தமிழரின் பழமையைப் பறைசாற்றி நிற்கிறது. இக்கைக்கோடாரியைப் பற்றி தீ.ஸ்ரீ. ஸ்ரீதர், "இந்தியாவிலேயே முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பெற்ற கல்வெட்டுப் பொறிப்புடன் காணப்படும் கல்லாயுதம் இதுவே என்கிறார். அதிலும் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் சிந்துவெளி நாகரிக எழுத்தமைதியில் இருப்பது மிகுந்த சிறப்புக்குரியது. இதுவரை இதுபோன்ற குறியீடுகள் தமிழகப் பாறை ஓவியங்களிலும் இரும்புக் கால ஈமச் சின்னங்களிலும் மட்டுமே கிடைத்துள்ளன. பெருங்கற்காலத்தினை விட முந்தியதாக இக்கல்லாயுதத்தில் உள்ள எழுத்துப்பொறிப்புகள் அமைந்துள்ளன." (கல்வெட்டுச் சிறப்பிதழ், ப. 3) சவ்வாது மலையிலுள்ள கற்கோடாரிகளை நுணுகி ஆராய்ந்தால் எழுத்துப்பொறிப்புகள் கிடைக்கவும் வாய்ப்புகள் உள்ளன. மேலும், இக்கற்கோடாரிகள் மனிதனின் தொன்மைத் தோற்றமான மலைகளில் இருப்பது பழமையின் அடையாளமே ஆகும்.*

புதிய கற்கால மனிதர்கள் பயன்படுத்திய கல் ஆயுதங்கள் கோடாரிப் போன்ற அமைப்பினைப் பெற்று இருக்கின்ற காரணத்தினால் இதனைக் 'கற்கோடாரி' என்று அழைக்கலாம். சவ்வாது மலைகளில் வாழ்ந்த தொல் மனிதர்களின் முக்கிய ஆயுதமாக இவற்றைக் கருத இடமுண்டு. மரங்களை வெட்டுவதற்கும் விலங்குகளை வேட்டையாடுவதற்கும் வேட்டையாடிய விலங்குகளின் உடலைக் கிழிப்பதற்கும் கற்கோடாரிகள் பயன்படுத்தப்பட்டிருக்கும். சிறியதும், பெரியதுமாக எண்ணற்ற வகைகளில் கற்கோடாரிகள் காணக்கிடைக்கின்றன. சவ்வாதுமலைகளில் உள்ள வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட புதூர்நாடு, புங்கம்பட்டுநாடு, நெல்லிவாசல் நாடு ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட 34 கிராமங்களில் உள்ள பல கோயில்களிலும் கற்கோடாரிகளை மக்கள் தெய்வமாக வணங்குகின்றனர். இதனைப் பிள்ளையார் என்று அழைக்கின்றனர். முன்னோர்கள் பயன்படுத்திய பொருட்களை, நினைவுச் சின்னங்களாக இம்மக்கள் போற்றி வணங்குவது குறிப்பிடத்தக்கது.



**புதூர்நாட்டுக்குட்பட்ட கோவிலில் காணப்படும் கற்கோடாரிகள்**

திருவண்ணாமலை மாவட்டத்திற்குட்பட்ட சமுனாமரத்தூர் பகுதிகளில் உள்ள கோயில்களிலும் கற்கோடாரிகள் தெய்வமாக வணங்கப்படுவதைக் காணமுடிகிறது. "சவ்வாதுமலைத் தொடரில் அமைந்துள்ள தென்மலையில் புலியூர்நாட்டுப் பகுதியில் நிலங்களை உழும்பொழுதும் செய்யாற்றின் படுகைகளிலும் செய்யாற்றில் கலக்கும் கானாறுகளிலும் ஏராளமான புதிய கற்காலக் கோடாரிகள் கிடைக்கின்றன. இக்கோடாரிகளைக் கண்டெடுக்கும், இம்மலைப் பகுதியில் வாழ்ந்து வரும் மலைவாழ் மக்கள் அவற்றைப் பாதுகாத்து அவர்கள் வாழும் கிராமத்திலுள்ள கோயில்களிலும் இறந்தவர்களை அடக்கம் செய்த நினைவுச் சின்னங்களின் (சமாதிகள்) மேலும் வைத்து வழிபட்டு இக்கருவிகளைத் தெய்வம் போலக் காத்து வருவதை இன்றும் எல்லா ஊர்களிலும் காணலாம்" (நன்னன் நாடு மாத இதழ், பிப்ரவரி 2000)தமிழகத்தில் கிடைத்துள்ள கைக்கோடாரிகளில் செம்பியன் கண்டியுர்,

சென்னைப் பல்லாவரம், வேலூர் மாவட்டத் திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள பையனம்பள்ளி ஆகிய ஊர்களில் கிடைத்த கைக்கோடாரிகள் சிறப்புக்குரியனவாகும். அவ்வரிசையில் திருப்பத்தூருக்கு அருகாமையில் உள்ள சவ்வாதுமலைத் தொடரில் இக்கற்கோடாரிகள் குவிந்திருப்பது நோக்கத்தக்கது.

### *3. கற்கோடாரிப் பட்டறை*

*புதூர்நாட்டில் அமைந்துள்ள ஒரு சிற்றூர் கீழானூர். இது வரலாற்றுச் சிறப்புடைய ஊராகும். இரமேசு என்பவர் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கீழானூர் பகுதியில் தமிழர் கல்லாயுதக் கிடங்கு வைத்திருந்த செய்தி்யை 'தி இந்து' நாளிதழில் வெளியிட்டுள்ளார்.*

***"A centre for sharpening polished Neolithic (Stone) tools made about 5,000 Years ago has been found near the Keezhanur hamlet on the Jawathi Hills in Vellore District, of Tamil nadu. The ~centre| is a bed rock in the middle of a rivulet, about a KM from Keezhanur, with 21 grooves it is in these grooves on the rock surface that the Neolithic man sharpend the edges of his polished stone axes when they got blunted after usage in cultivation. The shallow, trough shaped grooves were formed by his constantly sharpending the tools against the more rock surface" (Hindu, Apirl 3, 2013, page 20)*** *என்னும் செய்தியின் மூலம் 5, 000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கீழானூர் பகுதியில் பழந்தமிழர் கல்லாயுதப் பட்டறை வைத்திருந்ததை அறியமுடிகிறது. இங்கு வாழ்ந்த மக்கள் புதூர்நாட்டு வழியாக பண்ரேவ், பரமனந்தல், செங்கத்தோடு தொடர்பு வைத்திருந்திருப்பர் அல்லது கீழானூர் வழியாகப் புதூர்நாட்டிலிருந்து கீழூர் வழியாக வலசை, வளையாம்பட்டு வழியாகச் செங்கத்தைச் சென்று சேர்ந்திருப்பர். எனவே, இப்பாதை சங்க இலக்கியமான மலைபடுகடாமில் கூத்தர்கள் செங்கத்திற்குச் சென்ற மலைவழியாக இருக்க வேண்டும்.*

### ஆய்வுக்குத் துணைநின்ற நூல்கள்

*1. எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தஞ்சாவூர்; பக்280-281, 1995.*

*2. கல்வெட்டுச் சிறப்பிதழ், கல்வெட்டு - காலாண்டிதழ் : 70 (ஏப்ரல் 2006) தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை.*

*3. தி இந்து நாளிதழ், 03-04-2013, ப.20.*

*4. சோமசுந்தரனார் உரை பொ. வே மலைபடுகடாம், கழக வெளியீடு, 1965.*

*5. நேர்காணல் : சந்திர மூர்த்தி.மா, 20-10-2016, மேனாள் துணை இயக்குநர், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை*

********